பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 10 வெள்ளிக்கிழமை 26.11.2021 கதிர் 249

## 3 பாக். பிரஜைகளுக்கும் நிபந்தனையுடன் பிணை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.26

கொழும்பில் இந்தியத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தை ஓட்டோவில் பயணித்தபடி படம் பிடித்தார்கள் என்று கூறப்படும் மூன்று பாகிஸ்தானியர்களை 2



## யாழ். பல்கலையில் பிரபா பிறந்தநாள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.26

தமிழீழவிடுதலைப்புலிகளின்தலைவர் வே.பிரபாகரனின் 67ஆவது பிறந்தநாளை முன்னிட்டுயாழ்.பல்கலைக்கழகவளாகத்தினுள் மாணவர்கள் அவரது உருவ படத்திற்கு முன்பாக இன்று கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். 2

# தீருவிலில் நினைவேந்தலுக்கு தடைகோரும் மனு நிராகரிப்பு

## பருத்தித்துறை நீதிமன்றம் இன்று உத்தரவு

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை தீருவில் திடலில் மாவீரர் நினை வேந்தல் நடத்துவதற்கு தடை கோரிய பொலிஸாரின் மனு பருத்தித்துறை நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தீருவிலில் நினைவேந்தலை நடத்த அனுமதிக்க முடியாது என்று வல்வெட்டித்துறை நகரசபை அறிவித்திருந்தது. நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டுக்கு அமைவாக தடைகள் தொடர்பிலான கட்டளைகள் திருத்தி அமைக்கப்பட்ட நிலையில், தீருவில் திடலில் நினைவேந்தலை முன்னெடுக்க நகரசபை அனுமதித்திருந்தது. 2

## கேக் வெட்டும் படத்தை அனுப்பினாராம் தமிழ்த் தாதிய மாணவன் மீது தாக்குதல்!

### கடற்படை தாதிய மாணவன் அடாவடித்தனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.26

பிறந்த தினத்தை நினைவூட்டும் படம் அனுப்பிய கோபத்தில் கடற்படை தாதிய மாணவன் தமிழ் தாதிய மாணவன் மீது சரமாரித் தாக்குதலை நடாத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தாதிய பயிற்சிக் கல்லூரியில் பலர் கல்வி கற்று வரும் நிலை 2



## விடுதலையான 23 தமிழக மீனவர்களில் 18 பேர் இன்றிரவு சென்னை புறப்பாடு!

### தொற்றுக்குள்ளான ஐவரின் பயணம் தாமதம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 23 இந்திய மீனவர்களில் 18பேர் இன்று இரவுஇந்தியாபுறப்படுகின்றனர்.

பருத்தித்துறை கடற்பரப்பிற்குள் இரு படகுகளில் ஊடுருவிய 23 இந்திய மீனவர்களையும் ஒத்தி வைக்கப்பட்ட 2

## பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் 'ஹேவா டிங்கர் லசந்த' உயிரிழப்பு

பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாளக் குழு உறுப்பினர் 'ஹேவா டிங்கர் லசந்த' என அழைக்கப்படும் ஹேவாலுனுவிலகே லசந்த பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.

இன்று அதிகாலை களுத்துறை - தியகம பகுதி 2

## நோய் அறிகுறிகள் இன்றி சமூகத்தில் தொற்றைப் பரப்புவோர் இருக்கக்கூடும்

### சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு,நவ.26

கொரோனா நோய் அறிகுறிகள் இன்றி சமூகத்தில் நோய்த் தொற்றைப் பரப்பக்கூடியவர்கள் இருக்கலாம்என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். 2

✦ மனித உரிமைகளைப் பேணல் ✦ பொறுப்புக் கூறல் ✦ நல்லிணக்கம் ✦ சிறுபான்மையோரின் உரிமைகள்

## பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் சுமந்திரனுடன் கலந்தாலோசனை






பிரிட்டன் தெற்காசிய, ஐ.நா. மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்குப் பொறுப்பான வெளிவிவகார அமைச்சர் தாரிக் அஹமட் பிரபுவுடன் நேற்று சுமார் ஒரு மணி நேரம் நேரடியாகப் பேச்சு நடத்தினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. 2



## ரயர் கொழுத்திய மூன்று பேர் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.26

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் பிறந்த தினமான இன்று குருநகர் பகுதியில் வீதியில் ரயர் கொழுத்த முற்பட்ட மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




## மாவீரர் நாளை ஏளனம் செய்யும் சுவரொட்டிகள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.26

மரணித்த விடுதலைப் புலிகளைப் போற்றும் மாவீரர் தினம் நாளை நினைவு கூரப்படுகின்றது. 2



## அனலைதீவில் கடலில் இன்று மிதந்து வந்த 28 கிலோ மஞ்சள் மூடை

கடலில் மிதந்து வந்த 28 கிலோ எடையுடைய மஞ்சள் மூடை ஒன்று இன்று 2

## வவுனியாவில் இன்று இளம் குடும்பஸ்தர் மின்னல் தாக்கி சாவு

(ந.லோகதயாளன்)

வவுனியா இராசேந்திர குளம் பகுதியில் மீன்பிடிக்க சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் இடி மின்னல் 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## 3 பாக். .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யும் நிபந்தனைப் பிணையில் விடுவித்துள்ளது கொழும்பு நீதிமன்றம்.

மேற்படி குற்றச்சாட்டில் கைதான மூவரும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டாலும் இவர்கள் நாட்டை விட்டு வெளியேற இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று பாகிஸ்தானியர்கள் தொடர்பிலும் இந்தியா அதிக கவனம் செலுத்துகின்றது என்றும் கூறப்பட்டது..

## யாழ். பல்கலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதேவேளை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், யாழ்.பல்கலைக்கழக சூழல் உள்ளிட்ட பகுதிகளில் ஆயுதங்களுடன் இராணுவத்தினர், பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளமையுடன், புலனாய்வாளர்களின் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் கேக் வெட்டி பிறந்தநாளைக் கொண்டாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கேக் வெட்டும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மையில், அங்கே கடற்படையைச் சேர்ந்தவர்களும் தாதிய பயிற்சியை பெற்று வருகின்றனர்.

லண்டனில் இலங்கைத் தூதரகம் முன் போராட்டம் நடத்திய ஈழத்தமிழர்களைப் பார்த்து கழுத்தை அறுப்பேன் என சமிக்ஞை காட்டிய இராணுவ அதிகாரியின் படத்தை கடந்த மே-19 அன்று (முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலத்தில்) மேற்படி மாணவர்களில் கடற்படை தாதிய மாணவர்கள் தமிழ் தாதிய மாணவர்களிற்கு அனுப்பிக் கோபத்தை ஏற்படுத்தியிருந்தனராம்.

இப்படி சீற்றத்தை ஏற்படுத்திய கடற்படைத் தாதிய மாணவர்களின் இலக்கத்திற்கு பிறந்த நாளிற்கு கேக் வெட்டும் படத்தை தமிழ் தாதிய மாணவன் இன்று அனுப்பியுள்ளான். இதனால் ஆத்திரமடைந்த கடற்படை தாதிய மாணவன், தமிழ் தாதிய மாணவனைக் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

இந்த விடயம் வைத்தியசாலை நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட போது "நாட்டின் சூழலில் நீங்கள் ஏன் கேக் வெட்டும் படத்தை இன்று அனுப்பினீர்கள்?" எனக் கேட்டு, வேறு நடவடிக்கை ஏதும் எடுக்காமல் நிர்வாகம் அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

## பொலிஸாரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் இன்று அதிகாலை களுத்துறை - தியகம பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து அவரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை மீட்பதற்காகப் பொலிஸாரால் குறித்த பகுதிக்கு சந்தேகநபர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதன்போது, திடீரென பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து, பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தியதில் சந்தேகநபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் இரண்டு பொலிஸார் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## நோய் அறிகுறிகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

சுகாதாரப் பிரிவினால் தினசரி 5,000 இற்கும் அதிகமான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் நாடு முழுவதும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போதும் நோய்த் தொற்றுக்குள்ளான பின்னரே எமக்குத் தெரிய வருகின்றது. நாம் அதை எதிர்பார்க்கவில்லை. நோய்த் தொற்று ஏற்படாதவாறு நாம் இருக்க வேண்டும். அதற்காக சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். இத்தருணத்தில் தடுப்பூசிப் பாதுகாப்புடன் நோய் அறிகுறிகள் இன்றி நோயை பரப்பக்கூடிய பலர் நம்மிடத்தில் இருக்கக்கூடும். இதன் காரணமாக நாம் அனைவரும் மிகவும் பாதுகாப்பாக இருக்கவேண்டும். மரண எண்ணிக்கை அதிகரிப்பு நோயாளர்களின் குறைவின்மையைக் காட்டுகிறது."- என்றார்.

## விடுதலையான 23 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிறைத் தண்டனையுடன் விடுவித்த நீதிமன்றம் அவர்களது படகுகளை அரச உடைமையாக்கியது தெரிந்ததே.

விடுவிக்கப்பட்ட 23 இந்திய மீனவர்களும் தாயகம் திரும்ப ஏற்பாடுகள் மேற்கொண்ட சமயம் அவர்களில் மூவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டது. இதனால் எஞ்சிய 20 பேரையும் இன்று தமிழ்நாட்டிற்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

விமானச் சிட்டை எடுப்பதற்காக நேற்றைய தினம் மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையில் மேலும் இருவருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது. இதனால் தற்போது 18 பேர் மட்டும் இன்று நள்ளிரவு 11.50க்கு புறப்பட்டு அதிகாலை விமானத்தில் சென்னை செல்கின்றனர்.

இவர்கள் நாளை காலை அவர்களது வீடுகளிற்கு சென்றடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது. கொரோனாத் தொற்றிற்கு இலக்கான ஐவரும் குணமடைந்த பின்னர தாயகம் அனுப்பி வைக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மாவீரர் நாளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனை ஏளனம் செய்யும் துண்டுப் பிரசுரம் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான துண்டுப் பிரசுரங்கள் வல்வெட்டித்துறை, சாவகச்சேரி போன்ற பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.




## அனலைதீவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

அனலைதீவு கடலில் சந்தேகத்திற்கு இடமான மூடை ஒன்று இன்று காலை 5.30 மணியளவில் மிதந்து வந்துள்ளது.

அதனை கடற்படையினர் எடுத்து பிரித்துப் பார்த்தவேளை அதில் மஞ்சள் இருப்பது கண்டறியப்பட்டது.

## வவுனியாவில் இன்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாக்கத்திற்கு இலக்காகி உயிரிழந்தார்.

சிவலிங்கம் தினேஷ்குமார் என்ற இளம் குடும்பஸ்தவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இராசேந்திரகுளத்தில் மீன்பிடிப்பதற்காக இன்று காலை தனது வீட்டில் இருந்து சென்றவர் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாத நிலையில் அவரது மனைவி குளப்பகுதிக்குச் சென்று தேடியுள்ளார்.

இதன்போது குளப்பகுதியில் காணப்பட்ட ஓர் பிட்டியில் அவர் சடலமாகக் கிடந்தமை கண்டறியப்பட்டது. மின்னல் தாக்கத்தின் காரணமாக அவர் இறந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற கிராம சேவையாளர் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பிரிட்டன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லண்டனில் வெளிவிவகார அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்புக் குறித்து அமைச்சர் தாரிக் அஹமட் டுவிட்டரில் தகவல் வெளியிட்டுள்ளார்.

"இன்று எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்ததில் மகிழ்வடைகின்றேன்.

"மனித உரிமைகளைப் பேணுவது, பிணக்குக்குப் பின்னரான பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் ஆகியவற்றோடு அனைத்து சிறுபான்மையினரதும் உரிமைகளை மதிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் நாங்கள் கலந்துரையாடினோம்." - என்று அந்த டுவிட்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியனும் கலந்து கொண்டார். (உ)

## தீருவிலில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்நிலையில் இதனை எதிர்த்து அனுமதி வழங்கக்கூடாது என்று கட்டளை வழங்குமாறு பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் சமர்ப்பணம் செய்திருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி தடை செய்யப்பட்ட இயக்கத்தை அடையாளப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதே யன்றி, இறந்தவர்களை நினைவுகூர்வதைத் தடுக்க முடியாது என்று தெரிவித்து மனுவைத் தள்ளுபடி செய்திருக்கின்றார்.

எனினும், தீருவில் மைதானத்தில் பெரும் எண்ணிக்கையில் படையினர் குவிக்கப்பட்டிருக்கின்றமையையடுத்து அங்கு நினைவேந்தல் நிகழ்வை நடத்துவது சாத்தியமா என்பது தெரியவில்லை.

இதேசமயம் -

நினைவேந்தலுக்கு விடுக்கப்பட்ட தடையை நீக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட மனு சாதகமான முடிவைத் தரவில்லை என சட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

கோயில்கள், தேவாலயங்களில் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் கொடிகள், அடையாளங்கள் இன்றி நினைவு கூரல் வழிபாடுகளை முன்னெடுக்க அனுமதி உண்டு என்ற சாரப்பட தடை உத்தரவில் சில தளர்வுகளை ஏற்படுத்துவதற்கு கிளிநொச்சி நீதிமன்றம் இணங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாவலர் எனும் போராளி

நாளைய தினம் இரண்டு விடயங்களால் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒன்று தம் மக்களுக்காய்த் தம் இன்னுயிரை ஈந்த மாவீரர்களைத் தமிழினம் ஏற்றிப் போற்றித் துதிக்கும் தினம். மற்றையது நல்லை நகர் தந்த நாவலர் பெருமானின் குருபூசைத் தினம்.

நாவலரும் கூட மாவீரர்கள் வரிசையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவரே என்பதைப் பலரும் புரியாமல் இருப்பது வியப்புக்குரியது.

இரு தரப்பினருமே – நாவலரும் சரி, மாவீரர்களும் சரி – தமது செயற்நோக்கில் ஒன்றுபட்டவர்களே என்பதை நமது சமூகம் மறந்துவிடக் கூடாது.

சுதேசிகளுக்கு விதேசிகளால் வந்த நெருக்கடிகளை எதிர்கொள்ளவே இவர்கள் அனைவரும் போராடினார்கள் என்பதை நாம் மனம் கொள்ள வேண்டும்.

விதேசிகளின் – வெளியாரின் – ஆக்கிரமிப்பினால் சுதேசிகளின் மதம், மொழி, தனித்துவங்கள், வழக்காறுகள், பண்பாட்டுக் கோலங்கள், பழக்க வழக்கங்கள் சிதறடிக்கப்பட்ட போது அதற்கு எதிராகக் கிளர்ந்தவர்களே இருவரும்.

நாவலர் காலம் வேறு. நமது மாவீரர்கள் காலம் வேறு. ஆனால் இரண்டு தரப்பினரும் எதிர்கொண்ட நெருக்கடி பெரும்பாலும் ஒரு வகைப்பட்டதே.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இலங்கைத் தமிழர்களின் தனித்துவ வாழ்வியலுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளையும் அவற்றுக்குத் தீர்வு காண நமது சமூக அரசியல் தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை எடுத்து பக்கச்சார்பின்றி நடுநிலைப் பண்பியலோடு ஆராய்பவர்கள் இந்நெருக்கடிகளை சிறப்புற எதிர்கொண்டு கையாண்டவராக நாவலரை அடையாளம் காண்பர் என்பது நிச்சயம்.

இந்தக் காலகட்டத்தில் சுதேசிகளான தமிழர்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள், அச்சுறுத்தல், ஆபத்துக்களைக் காலத்துக்குக் காலம் முகிழ்ந்த நம் தமிழ்த் தலைவர்கள் சரியாகவே அடையாளம் கண்டனர். அவற்றின் தீர்வுக்காக பல வழிவகைகளை, யோசனைகளை, திட்டங்களை முன்வைத்து அவர்கள் காரியமாற்றினார்கள். செயற்பாட்டாளர்கள் போராடினார்கள்.

ஆனால் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகளை அடையாளம் கண்டு, வெளிப்படுத்தி, அவற்றைச் செயற்படுத்தி வெற்றியும் கண்டவர் நாவலர் மட்டுமே.

அக்காலத்தில் அந்நியர் ஆதிக்கம் மொழியை, மதத்தை ஆக்கிரமித்து நின்றது. அந்நியரின் ஆதிக்க வழியிலேயே அவர் அதனை எதிர்கொண்டு முறியடிப்பதில் கணிசமான வெற்றியும் கண்டார்.

அவர்கள் பாடசாலைகள், கல்லூரிகளை நிறுவி, பிரச்சாரங்களை முன்னெடுத்து, தமிழர்களைத் தமது மொழி, மதம், பழக்கவழக்கங்கள் பக்கம் இழுத்து, தமிழினத்தின் தனித்துவத்தைச் சிதறடிக்க – சிதைக்க – முயன்றனர்.

நாவலரும் அதே வழியில், பாடசாலைகளை நிறுவி, சுய, சுதேசிக் கல்வி முறையை நிலைநாட்டினார். அந்நியருக்குப் போட்டியாக அச்சு இயந்திரசாலைகளை நிறுவி, அந்த வழியிலேயே பிரச்சாரப் பதிலடியை வழங்கினார். பிரசங்கங்கள் மூலமும் அதனை வெற்றிகரமாக முன்னெடுத்தார்.

நாட்டில் பட்டினிச் சாவு ஏற்பட்டபோது கஞ்சித் தொட்டித் திட்டம், அன்னசாலைகள் நிறுவுதல் போன்ற தமது மக்களின் கூட்டு முயற்சி மூலம், சொந்தக் காலில் நின்று அப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துத் தாண்டுவதற்கும் வழி செய்தார்.

அந்நிய ஆதிக்கத்தில் தமிழினத்துக்கும் தம் மக்களுக்கும் ஏற்பட்ட நெருக்கடிகளை சரியாக இனம் கண்டமை மட்டுமல்லாமல், அவற்றுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து அதில் வெற்றியும் கண்டமை வாயிலாகத் தீர்வையும் எட்டி, மற்றைய தமிழ்த் தலைவர்களிலும் மேம்பட்டு நிற்கின்றார் அவர்.



# அனைத்துப் பாலங்களின் தரம் குறித்தும் ஆராய கிழக்கு மாகாணத்தில் விசேடகுழு

கிழக்கு மாகாணத்தில் அனைத்து பாலங்களின் தரம் குறித்தும் ஆராய விசேட குழுவொன்று அனுப்பி வைக்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியல் பிரிவு மற்றும் கடற்படையினரால் இந்தக் குழுவிற்குத் தலைமை தாங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்தின் போது காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோரை பார்ப்பதற்காகக் கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்கு சென்ற போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க நாம் அனைவரும் உறுதி எடுக்க வேண்டும். ஒருவரையொருவர் நோக்கி விரல் நீட்டும் நேரம் இதுவல்ல. போருக்குப் பின்னர் இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான பாலங்கள் கிழக்கு மாகாணத்தில் கட்டப்பட்டன.


அது மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்தே ஆரம்பமானது. இலங்கையின் மிக நீளமான பாலம் கிழக்கு மாகாணத்தில் உள்ளது. இந்த இடத்தில் பாலம் கட்டும் பணி கொரோனாத் தொற்றால் பாதித்ததால் தாமதமானது. மாற்று வழி இருந்தபோதிலும் மக்கள் அதைப் பயன்படுத்த விரும்பவில்லை.

இந்தச் சம்பவத்தை நாங்கள் இப்போது விசாரித்து வருகிறோம். இன்று அறிக்கை பெறப்படும். அந்த அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் மீது அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்போம். குற்றவாளிகள் இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம். பொறுப்பிலிருந்து யாரும் தப்ப முடியாது.

எனினும் தற்போது இவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் கடற்படையினரால் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இந்த பாலத்தின் பணிகளை விரைவில் முடிக்க அரசு கவனம் செலுத்தி வருகிறது. – எனத் தெரிவித்தார்.

# இலங்கை – இந்திய ஒப்பந்தம் முழுமையாக அமுலாக வேண்டும்

## சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்தல்



1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை, இந்திய ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று( வியாழக்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்–

'சர்வதேச நாடுகளுடன் பல உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இதில் 1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம் மிக முக்கியம்.

எந்த அரசு வந்தாலும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்படக்கூடாது.

அவ்வாறு இன்னும் நடக்கவில்லை. நடந்தால் அது நாட்டுக்கு உகந்த விடயமாக இருக்காது.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை; 14 பேர் சாவு; ஒருவர் மாயம்!

## 22 பேர் காயம்

நாட்டில் நிலவும் மோசமான சீரற்ற வானிலை காரணமாக ஒன்பது மாவட்டங்களில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், அம்பாந்தோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், 22 பேர் காயமடைந்துள்ளமையுடன், ஒருவர் காணாமல் போயுள்ளார் எனவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் கூறியுள்ளது.

நாட்டில் நிலவும் மோசமான சீரற்ற வானிலை காரணமாக 452 வீடுகள் பகுதியளவிலும், 56 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.



# சில மணிநேரங்களில் பதவி விலகிய சுவீடனின் முதல் பெண் பிரதமர்!



பதவியேற்ற சில மணிநேரங்களிலேயே தான் பதவி விலகுகிறேன் என சுவீடனின் முதல் பெண் பிரதமர் மக்டேலேனா ஆண்டர்சன் அறிவித்துள்ளார்.

மக்டேலேனா ஆண்டர்சனின், கூட்டணி கட்சி, அரசாங்கத்திலிருந்து விலகியதால்அவரும்பதவி விலக வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார்.

தாங்கள் முன்மொழிந்த வரவு – செலவுத்திட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவிக்கவில்லை என்ற காரணத்தால் க்ரீன் கட்சி, கூட்டணியிலிருந்து விலகியது.

சுவீடன்பிரதமராகவும்,சமூக ஜனநாயக கட்சித் தலைவராகவும் இருந்த ஸ்டெபான் லோப் வென் அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்தார்.

இதையடுத்து, சுவீடனின் சட்ட நடைமுறைப்படி அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்கை பெற்று மக்டெலெனா பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுவீடனின் பெண் வாக்காளர் களுக்கு அனுமதி வழங்கப்பட்டு 100 வருடங்களுக்கு பிறகு 54 வயதாகும் சமூக ஜனநாயக கட்சியைச் சேர்ந்த மக்டெலெனா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மக்டேலேனா ஆண்டர்சனின் பதவி விலகலுக்கு பின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்பது குறித்து கட்சி தலைவர்களிடம் ஆலோசிக்கப்படும் என நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

தனது பதவி விலகல் குறித்து மக்டேலேனா ஆண்டர்சன் கூறுகையில், 'நான் பதவி விலக விரும்புகிறேன் என நாடாளுமன்ற சபாநாயகரிடம் தெரிவித்தேன். எதிர்காலத்தில் கூட்டணி எதுவும் இல்லாத ஒரே கட்சியின் ஆட்சியில் நான் பிரதமர் பதவியை வகிப்பேன் என்று நம்புகிறேன்.

அரசமைப்பின்படி கூட்டணியில் உள்ள ஒரு கட்சி விலகினால் மற்றொரு கட்சி பதவியிலிருந்து விலக வேண்டும். இந்த அரசாங்கம் சட்டப்பூர்வமாக அமைக்கப்பட்டுள்ளதா என்று கேள்விகள் எழும் அரசாங்கத்தை நான் வழிநடத்த விரும்பவில்லை' என கூறினார்.

முன்னாள் நீச்சல் வீராங்கனையான மக்டேலேனா 1996ஆம் ஆண்டு அரசியலுக்குள் நுழைந்தார். அப்போதைய பிரதமரான கோரன் பெர்சனுக்கு அரசியல் ஆலோசகராக அவர் தனது அரசியல் பயணத்தை தொடங்கினார்.

கடந்த ஏழு வருடங்களாக நிதிய மைச்சர் பதவி வகித்து வருகிறார். மக்டேலேனா பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னதாக அது வரை பெண் பிரதமர் இல்லாத ஒரே நார்டிக் நாடாக சுவீடன் இருந்தது.

# அகதிகளை வரவேற்கும் இலக்கை கனடா எட்டவில்லை என்கிறது புள்ளிவிவரங்கள்



2021ஆம் ஆண்டுக்கான அகதிகளை வரவேற்கும் இலக்கை கனடா எட்டவில்லை என குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடாவின் புள்ளவிவரங்கள் தெரிவிக்கின்றன.

2021ஆம் ஆண்டு இறுதிக்குள் 81,000 அகதிகளை வரவேற்க்க கனடா திட்டமிட்டிருந்தது. ஆனால், ஒக்ரோபர் 31ஆம் திகதி வரை அகதிகள் உள்வாங்கல் இலக்கில் பாதியிலேயே இருந்தது என்பதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

ஒக்ரோபர் 31ஆம் திகதியின்படி, 7,800க்கும் மேற்பட்ட அரசாங்க உதவி அகதிகளை கனடா வரவேற்றுள்ளது. இது மத்திய அரசாங்கத்தின் இலக்கான 12,500க்கும் குறைவானதாகும்.

கனடா வெறும் 4,500 தனியாரால் வழங்கப்பட்ட அகதிகளை ஏற்றுக்கொண்டது. தனியார் நிதியாதரவு (ஸ்பான்சர்) செய்யப்பட்ட அகதிகளுக்கான உட்கொள்ளும் இலக்கு 22,500ஆக இருந்தது.

குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடாவில் 32,000க்கும் மேற்பட்ட அகதிகள் பாதுகாக்கப்பட்டவர்களாக (நாட்டிற்குள் நுழைந்த பிறகு புகலிடம் கோருபவர்கள்) தகுதி பெற்றுள்ளனர். இது அதன் இலக்கான 45,000க்குக் கீழே இருந்தது.

# தடுப்பூசி செலுத்திக்கொண்ட வெளிநாட்டினர் ஏப்ரல் 30 முதல் நியூசிலாந்துக்குள் நுழையலாம்





முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட வெளிநாட்டினர், அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாட்டிற்குள் வரலாம் என நியூசிலாந்து அரசாங்கம் அறிவித்துள்ளது. இதுகுறித்து கொரோனா கட்டுப்பாடுகளை நிர்வகிக்கும் சிறப்பு அமைச்சர் கிறிஸ் ஹிப்கின்ஸ் கூறுகையில், 'கொரோனாத் தொற்றில் இருந்து நமது நாட்டை பாதுகாப்பாக வைத்திருத்தக நாம் எடுத்த முதல் தீர்க்கமான நடவடிக்கை நமது எல்லைகளை மூடுவது. அதே போல் கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்துவதில் நமது கடைசி நடவடிக்கை எல்லைகளை திறப்பது ஆகும்.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்ட நியூசிலாந்து பிரஜைகள் அடுத்த ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி முதல் நியூஸிலாந்து வரலாம்.

அதே போல் 2 டோஸ் தடுப்பூசி எடுத்துக்கொண்ட நியூசிலாந்து மக்கள் பெப்ரவரி 13ஆம் திகதி முதல் வெளிநாடுகளுக்கு செல்லலாம். அதன் தொடர்ச்சியாக ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் முழுமையாக தடுப்பூசி போட்டுக்கொண்ட வெளிநாட்டினர் நியூசிலாந்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள்' என கூறினார்.

# சைபீரிய சுரங்க தீ விபத்து; உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 52ஆக உயர்வு!

சைபீரிய நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 52 சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் உயிரிழந்தனர் என ரஷ்ய செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. தென்மேற்கு சைபீரியாவின் கெம ரோவோ பகுதியில் உள்ள லிஸ்ட்யாஸ்னியா சுரங்கத்தில் நேற்று (வியாழக்கிழமை) இந்த தீவிபத்து ஏற்பட்டது.

மொத்தம் 285பேர், 820 அடி ஆழத்தில் நிலக்கரி வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தீ வெடித்து காற்றோட்ட அமைப்பு மூலம் சுரங்கத்தை விரைவாக நிரப்பியது.

இதனையடுத்து, மீட்புப் பணியாளர்கள் 239 சுரங்கத் தொழிலாளர்களை மேற் பரப்பிற்கு அழைத்துச் சென்றனர். அவர்களில் 49 பேர் காயமடைந்தனர்.

வெடிக்கும் மீத்தேன் வாயு மற்றும் தீயில் இருந்து நச்சுப் புகைகள் அதிக அளவில் குவிந்ததால், மீட்புப் பணியாளர்கள் 14 உடல்களைக் கண்டுபிடித்தனர் எனவும் பாதுகாப்பு காரணங்களுக்காக 38 பேரைத் தேடும் பணி நிறுத்தப்பட்ட தாகவும் அதிகாரிகள் முன்பு தெரிவித்தனர். ஆனால், அவசரகால அதிகாரிகள், உயிர்பிழைத்தவர்களைக் கண்டுபிடிக்க வாய்ப்பில்லை என கூறியுள்ளனர்.

இதுகுறித்து ரஷ்யாவின் துணை வழக்கறிஞர் ஜெனரல் டிமிட்ரி டெமேஷின் ஊடகங்களிடம் கூறுகையில், 'தீப்பொறியால் ஏற்பட்ட மெதேன் வெடிப்பினால் தீ ஏற்பட்டிருக்கலாம். சுரங்கத்தின்போது நிலக்கரி படுக்கைகளில் இருந்து வெளியாகும் மெதேன் வெடிப்புகள் அரிதானவை ஆனால் அவை நிலக்கரி சுரங்கத் தொழிலில் அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்துகின்றன' என கூறினார்.

ரஷ்யாவின் விசாரணைக் குழு, இறப்புக்கு வழிவகுத்த பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய தீ விபத்து குறித்து குற்றவியல் விசாரணையைத் தொடங்கியது. சுரங்க இயக்குநரும் இரண்டு மூத்த மேலாளர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது இரங்கலைத் தெரிவித்தார் மற்றும் காயமடைந்தவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குமாறு அரசாங்கத்திற்கு உத்தரவிட்டார். பிராந்திய அதிகாரிகள் மூன்று நாட்கள் துக்கம் அறிவித்தனர்.



# இந்தியாவின் மிகப்பெரிய விமான நிலையம் பிரதமர் மோடி இன்று அடிக்கல் நாட்டினார்




டெல்லி மற்றும் மும்பை விமான நிலையங்களை மிஞ்சும் வகையில், நாட்டின் மிகப்பெரிய விமான நிலையத்தை உத்தரப் பிரதேச மாநிலத்தில் அமைக்கும் பிரம்மாண்ட திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிஇன்று அடிக்கல் நாட்டினார். .40, 000 கோடி முதலீட்டில் இந்த விமான நிலையம், முழுவதுமாக கட்டிமுடிக்கப்படும் போது இதுதான் ஆசியாவி லேயே பெரிய விமான நிலையம் இருக்கும் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய தலைநகர் டெல்லிக்கு அருகில் உத்தரப் பிரதேச மாநிலம் கௌதம் புத்த நகரில் உள்ள ஜேவாரில், இந்த விமான நிலையம் அமையவுள்ளது. நொய்டா சர்வதேச விமான நிலையம் என இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டம், 2024 ஆம் ஆண்டுக்குள் கட்டிமுடிக்கப்படும் எனக் கூறப்படுகிறது. அடுத்த வருடம் உத்தரப் பிரதேச மாநிலத்தில் சட்டசபைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அந்த மாநிலத்தில் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. அதன்படியே நொய்டா சர்வதேச விமான நிலையத்தின் அறிவிப்பும் வெளியாகியுள்ளது எனச் சொல்லப்படுகிறது. உத்தரப் பிரதேச மாநிலத்தின் வளர்ச்சிக்கு இந்த விமான நிலையம் ஊக்கம் அளிக்கும் என அடிக்கல் நாட்டு விழாவில் இந்தியப் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

கிழக்கு டெல்லி எல்லைக்கு அருகில் அமையவுள்ளதால், இந்த விமான நிலையம் டெல்லி பிராந்தியத்தின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக இருக்கும். இது இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தின் நெருக்கடி குறைவதற்கும் உதவுமென சொல்லப்படுகிறது. இதன் அமைவிடம் காரணமாக டெல்லி, நொய்டா, காசியாபாத், அலிகார், ஆக்ரா, பாரிதாபாத் மற்றும்அருகில்உள்ளபகுதிகள்உள்ளிட்டநகரங்களின் மக்களுக்கு அருகாமையில் சர்வதேச விமான சேவைகளை கொண்டுசேர்க்கும் என இந்தியப் பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## அம்மா உணவகம் போன்று கலைஞர் உணவகம் உருவாகும்

### டெல்லி கூட்டத்தில் தமிழக அமைச்சர் சக்கரபாணி தகவல்




இந்தியாவில் மாதிரி சமுதாய சமையல் கூடம் திட்டத்தை செயல்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை, நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத் துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் பியூஸ் கோயல் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழக உணவுத்துறை அமைச்சர் ஆர்.சக்கரபாணி கலந்து கொண்டார்.

தமிழ்நாடு அரசு அனைத்து தரப்பு மக்களுக்கும் வருமானம் மற்றும் சமூக பாகுபாடின்றி உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்திட கடந்த 40 ஆண்டுகளாக அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

இந்த அரசு பதவியேற்ற உடன் தமிழ்நாட்டில் உள்ள 2 கோடியே 9 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 14 மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை 978 கோடி செலவிலும், தலா நான்காயிரம் ரொக்கத்தையும் கொரோனா பேரிடர் நிவாரணமாக வழங்கியது. வருகின்ற தமிழர் திருநாள் மற்றும் பொங்கல் விழாவை முன்னிட்டு, 21 உணவுப் பொருள்கள் அடங்கிய தொகுப்புகள் 2.15 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு 1,161 கோடி ரூபா செலவில் வழங்கப்படவுள்ளன.

தமிழ்நாடு அரசு 650 சமூக உணவகங்களை அம்மா உணவகம் என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக நடத்தி வருகிறது. தரமான உணவை மானிய விலையில் ஏழை, எளிய மக்களுக்கும்தேவைப்படுவோர்க்கும் இதன் மூலம் வழங்கி வருகிறது. கொரோனா காலத்திலும் இதர பேரிடர் காலங்களிலும் இந்த உணவகங்களில் கட்டணம் இல்லாமல் உணவு வழங்கப்படுகிறது. வருங்காலத்தில் இதேபோன்று கூடுதலாக 500 சமுதாய உணவகங்கள் கலைஞர் உணவகம் என்ற பெயரில் அமைக்கப்படவுள்ளன. தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தொலைநோக்குத் தலைமை மற்றும் வழிகாட்டுதலின்படி மத்திய அரசுடனும் பிற மாநில அரசுகளுடனும் இணைந்து செயல்பட்டு இந்தியாவை பட்டினி மற்றும் சத்துக்குறைவில்லா நாடாக மாற்ற தமிழ்நாடு துணை நிற்கும், என்று அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழக அமைச்சர் ஆர்.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

## அன்னா ஹசாரே மருத்துவமனையில்



ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் முன்னோடியாக இருந்த சமூக ஆர்வலர் அன்னா ஹசாரேக்கு நேற்று திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டதையடுத்து, அவர் உடனடியாக புனேவிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அன்னா ஹசாரேவின் உடல் நிலை சீராக உள்ளது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அன்னா ஹசாரே பூரண குணமடைய வேண்டும் என முதலமைச்சர் உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார்.

சமூகப் பிரச்சினைகளுக்காக அவ்வப்போது உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபட்டு கவனமீர்த்துவரும் அவர், புனேவில் இருந்து 87 கி.மீ. தொலைவில் உள்ள மகாராஷ்டிராவின் அகமது நகர் மாவட்டத்தில் உள்ள ராலேகான் சித்தி கிராமத்தில் வசித்துவந்தார்.



## அதிநவீன வேலா நீர்மூழ்கிப் போர்க்கப்பல் இந்திய நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது

இந்தியக் கடற்படைக்கு 6 ஸ்கார்பியன் வகை நீர்மூழ்கி போர்க்கப்பல்களைத்தயாரிப்பதற்காக, பிரான்ஸ் நாட்டுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அந்நாட்டு தொழில்நுட்ப உதவியுடன் உள்நாட்டிலேயே இந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் தயாரிக்கப்படுகின்றன.

மும்பையில் உள்ள மஜ்காவ் டாக்யார்ட் நிறுவனம் இந்த நீர்மூழ்கிக் கப்பல்களின் கட்டுமானப் பணியை மேற்கொண்டுள்ளது. இதுவரை கல்வாரி, காந்தேரி, கராஞ்ச் ஆகிய நீர்மூழ்கி கப்பல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், 4 ஆவது நீர்மூழ்கிக் கப்பலான ஐ.என்.எஸ். வேலா தயாரிக்கப்பட்டு, அது பல்வேறு கட்ட சோதனைகளையும் மேற்கொண்டது. சோதனைகளை வெற்றிகரமாக முடித்த வேலா, நேற்று இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டது. இந்தியக் கடற்படைத் தளபதி கரம்பீர் சிங், இந்த நீர்மூழ்கிக் கப்பலை இந்திய நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

கடலுக்கு அடியில் இருந்து நிலத்தில் உள்ள இலக்கு மற்றும் எதிரிநாட்டு நீர்மூழ்கிக் கப்பலை தாக்கக்கூடிய ஏவுகணைகளைச் சுமந்து செல்லும் நவீன தொழில்நுட்பங்கள் கொண்டது இந்த நீர்மூழ்கிக் கப்பல். இதில் நவீன தொழில்நுட்பத்துடன் சோனார்மற்றும்சென்சார்கள் உள்ளன. மேலும் நீர்மூழ்கிக் கப்பலில் பெர்மாசின் எனப்படும் நவீன ரக இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எதிரிகளின் கவனத்தை திசை திருப்பி துல்லியமாக தாக்கும் திறன்கொண்ட இந்த நீர்மூழ்கிக் கப்பல் இந்தியாவின் மேற்கு மண்டல கடற்படையில் சேவையாற்றவுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்தான் மும்பையில் நடந்த விழாவில் பாது காப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஐ.என்.எஸ். விசாகப்பட்டினம் போர்க்கப்பலை இந்திய நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தார். இந்தநிலையில் நேற்று ஐ.என்.எஸ். வேலா கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால், இந்திய கடற்படையின் பலம் அதிகரித்துள்ளதாக இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கைதான 60 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

## நீதிமன்றம் உத்தரவு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட 60 பேரையும் எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 21.4.2019 ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம் பெற்ற தாக்குதலின் பின்னர் சந்தேகத்தின் பெயரில் காத்தான்குடியைச் சேர்ந்த 65 பேரை கைது செய்தனர்.

அதேவேளை இவர்களில் 5 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டமையுடன் 2 பேருக்கு எதிராக கொழும்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் 2 பேரின் வழக்கு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதையடுத்து 60 தொடர்ந்து பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப் பட்ட போது குறித்த 60 பேரையும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

# மண்முனைப்பற்று பிரதேச செயலக மாபெரும் ஐந்தாவது இலக்கிய விழா



மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடாத்திய மண்முனைப்பற்று பிரதேச இலக்கிய விழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.ந.சத்தியானந்தி தலைமையில் ஆரையம்பதி நந்தகோபன் கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமானகே.கருணாகரன் கலந்துகொண்டார். தொடர்ந்து புதிய மழை தூறல் 5 ஆவது நூல் பிரதேச செயலா ளரினால் வெளியிட்டு வைக்கப் பட்டதுடன், நூலின் முதற்பிரதி பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட அர சாங்க அதிபர் கே.கருணாகரனுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக 5 ஆவது தடவையாக இடம்பெற்றுவரும் இலக்கிய விழாவில் இவ்வாண்டிற்கான இலக்கிய துறைக்கான கௌரவம் மூத்த இலக்கியவாதியான ச.க.பொன்னம்பலம் அவர்களுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களினால் வழங்கி வைக்கப் பட்டது.

# சுகாதாரத் துறையினர் மட்டக்களப்பில் போராட்டம்




பல்வேறு கோரிக்கைகளை வலிறுத்தி வைத்தியசாலைகளில் சுகாதாரத் துறையினர் இன்று சுகவீன விடுமுறை போராட்டத்தினை முன்னெடுத்துள்ளமையுடன் நேற்று வைத்தியசாலைகளில் கவனவீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சுகாதார துறையின் தொழிற்சங்க உறுப்பினர்கள் வைத்தியசாலையில் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். சுகாதார தொழில் வல்லுனர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சேவை தரம் உறுதிப்படுத்தப்படவேண்டும், சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படல் வேண்டும், கடந்த அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்ட பதவி உயர்வு தீர்மானங்கள் இதுவரையில் நிறைவேற்றப்படாமை,சிறிய தொகையாக வழங்கப்பட்டுள்ள சிறியளவில் வழங்கப்படும் கொடுப்பனவு அதிகரிக்கப்படவேண்டும், தரநிலை தொடர்பிலான சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் அதனை நடைமுறைப்படுத்தப்படாமை, சுகாதாரத்துறையில் உள்ளவர்கள் பட்டங்களைப் பெறும்போது அவர்களுக்கான பதவியுயர்வுகள் வழங்கப்பட வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சுகாதார துறையினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார துறையின் தாதியர்கள்,மருந்தக உதவியாளர்கள், மருந்தாளர்கள் இணைந்து சுகவீன விடுமுறைப்போராட்டத்தினை முன்னெடுத்துவரும் அதேநேரம் கவனவீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் காரணமாக வைத்தியசேவைகள் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

# திருகோணமலை குறிஞ்சங்கேணி பகுதியில் பாதுகாப்பான பயணிகள் போக்குவரத்து சேவை

பயணிகள் படகு கவிழ்ந்து பாடசாலைகள் மாணவர்கள் உள்ளடங்களாக 6 பேர் உயிரிழந்தமையையடுத்து குறிஞ்சங்கேணி களப்பு பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) முதல் பாதுகாப்பான பயணிகள் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரின் ஏற்பாட்டில் குறித்த பயணிகள் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலை, கிண்ணியாவில் உள்ள குறிஞ்சங்கேணி பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் வரை அப்பகுதி மக்கள் இந்தப் போக்குவரத்து முறையைப் பயன்படுத்த முடியும் என கடற்படை தெரிவித்துள்ளது.

இதற்கமைய கிழக்கு கடற்படை கட்டளை தளபதியின் மேற்பார்வையின் கீழ் ஒரே நேரத்தில் 25 பயணிகளை பாதுகாப்பாக ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட படகானது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. காலை 7.00 மணி முதல் 8.00 மணி வரையிலும், மதியம் 12.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையிலும் குறித்த படகு சேவையில் ஈடுபடவுள்ளது.



# ஐ.நா. உயர் அதிகாரியுடன் ரவூப் ஹக்கீம் சந்திப்பு

ஐ.நா சபையிலிருந்து வருகை தந்துள்ள அதன் மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்குரிய அரசியல் மற்றும் சமாதான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் காலித் கியாரி, மற்றும் இலங்கைக்கான ஐ.நா வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் உள்ளிட்ட உயர்மட்ட தூதுக்குழுவினர், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்தனர் .

நேற்று வியாழக்கிழமை கொழும்பு ஷங்கரிலா ஹோட்டலில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், சிறுபான்மைச் சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சமகால அரசியல் சூழ்நிலை என்பன குறித்து கலந்துரையாடியுள்ளனர் எனத் தெரியவருகிறது .



# தெல்லிப்பழை வைத்தியசாலையில் மருத்துவ சேவை பெறுவதில் சிரமம்

## நோயாளர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அடிப்படை மருத்துவ சேவை பெறுவதில் நோயாளர்கள் பெரும் சிரமப்படுகின்றனர் என விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் அடிப்படை மருத்துவ சேவைகளை நோயாளர்கள் பெறச்செல்லுகின்றபோது, வைத்தியசாலையின் இரு வாயில் கதவுகளும் மூடப்பட்டிருப்பதால் பாதுகாவலருக்கு உரிய காரணங்கள் தெரிவித்தபின்னரே உட்செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் தாம் பெரிதும் மன உழைச்சலுக்கு உட்படுகின்றோம் எனவும் நோயாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஏராளமான நோயாளர்கள் வருகின்றமையால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குச் சென்றால் இலகுவான முறையில் குறுகிய நேரத்தில் சிகிச்சை பெற்றுச் செல்லலாம் என்று நாம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை விரும்பி நாடினோம். ஆனால், தற்போது கொரோனாவைக் காரணங்காட்டி வேண்டுமென்றே எம்மைச் சிரமப்படுத்துகின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அடுத்ததாக எமது மாவட்டத்தில் கூடுதலான நோயாளர் சேவையை வழங்கிய வைத்தியசாலை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை. கடந்தகாலங்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் வெளிநோயாளர்கள் சிகிச்சை பெற்ற நேரத்தில், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளர்கள் மாதம் ஒன்றுக்கு சிகிச்சை பெற்றார்கள். ஆனால், தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கை 26 ஆயிரமாகக் குறைவடைந்துள்ளது என வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரோ, மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரோ, பிராந்திய பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளரோ எவரும் கண்டுகொள்ளாமல் உள்ளனர். நோயாளர் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரும், தமது சங்கத்தின் நோக்கக்கூற்றை மறந்து, வைத்தியசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் போன்றோருக்கு தேவையானவற்றை ஆற்றி வைத்தியசாலை நிர்வாகத்தைத் திருப்திப்படுத்துகிறார்களே யொளிய, நோயாளர்களின் இவ்வாறான பொதுவிடயங்களுக்காகக் குரல்கொடுப்பவர் களாகத் தெரியவில்லை என்றும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

# கரைச்சி பிரதேச சபையால் மரம் நடும் செயற்றிட்டம்



'மனங்கள் ஆற மரம் ஒன்று நடுவோம்' எனும் செயற்திட்டம் கரைச்சி பிரதேச சபையால் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

'விதையாகி எங்கள் விளைவாகி – நாளை நட்டவை மலர்ந்து நம் நிலம் மலரட்டும்' எனும் தொனிப்பொருளில் குறித்த செயற்திட்டம் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் பிரதேச சபை வளாகத்தில் இடம்பெற்றது.

பிரதேச சபையினரால் மரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 21 வட்டாரங்களுக்கும் சமமாக வட்டார உறுப்பினர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளுக்குச் சென்று குறித்த மரங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் உபதவிசாளர் தவபாலன், பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் 100 கோடி ரூபா பெறுமதியிலான அரிய வகையிலான இரத்தினக்கல் கண்டுபிடிப்பு

இலங்கையில் மிகவும் அரிய வகையைச் சேர்ந்த இயற்கையான பெனகைட் இரத்தினக்கல் லொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இது வரை கண்டுபிடிக்கப்பட்ட பெனகைட் இரத்தினக்கற்களில் இது மிகப் பெரியது என தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பேருவளை பகுதியைச் சேர்ந்த இரத்தினக்கல் வியாபாரியான மொஹமட் பஸ்ரீன் நளீர் என் பவர் பலாங்கொடையில் இருந்து குறித்த இரத்தினக்கல்லை கொள்வனவு செய்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

# நாவலரின் 142 ஆவது குருபூஜை நிகழ்வு நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்க ஏற்பாடு

சைவத் தமிழர்களுக்கென்று ஒரு மதிப்புமிகு அடையாளம் தந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். பல்துறை ஆளுமை மிக்க தீர்க்கதரிசனப் பார்வை கொண்ட பெருமகனார் நமக்காகச் செய்த அரும்பணி சைவத் தமிழுலகம் என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகாது. இத்தகு பெருமை மிகு பெருமானின் 142 ஆவது குருபூஜை நன்னாளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நாடளாவிய ரீதியிலே அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.

– இவ்வாறு அந்தத் திணைக்களம் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு–

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழாவும் குருபூஜையும் சேர்ந்த நிகழ்வாக, நாளை (சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம், அகில இலங்கை இந்துமாமன்றம், இந்து வித்தியா விருத்திச் சங்கம், இலங்கை சைவ நெறிக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு, கொழும்பு – பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் விசேட அம்சமாக, கனடா, சைவ சித்தாந்த பீட இயக்குநர், சைவ சித்தாந்த அறிஞர், வைத்திய கலாநிதி சிவத்திரு. இ. லம்போதரனின்;, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தொடர்பான சிறப்புரை நிகழ்வும் ஏற்பாடாகியுள்ளது.

நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நாளை சனிக்கிழமை, காலை 8.00 மணிக்கு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூஜை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் ஆசியுரை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் 'நாவலர் பெருமானின் வாக்கும் வாழ்வும்' என்ற தலைப்பிலான சிறப்புரையோடும் தெல்லிப்பழை, பன்னாலை, கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.



காரைதீவுப் பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன் தலைமையில், காரைதீவு, ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்களின் திருமுன்னிலை வகிக்க, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்துசிறப்பிக்க, மாணவர்களின் கலை நிகழ்வுகளோடு காரைதீவு, சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் நாளை (சனிக்கிழமை) காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

விசேடமாக முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்வுகளோடு வடக்கு, கிழக்கு மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. – என்றுள்ளது.

# கொள்கை வட்டி வீதத்தை மாற்றமின்றிப் பேண முடிவு

கொள்கை வட்டி வீதத்தை மாற்றமின்றி பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையால் இதுதொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய நிலையான வைப்பீடு வசதிகளுக்கு 5 வீதமாகவும் மற்றும் நிலையான கடன் வசதிக்கு 6 வீதமாகவும் இருக்கும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# தமிழ்ச்சங்கம் நடத்தும் நாவலர் நினைவரங்கம்

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் நாவலர் நினைவரங்கம் நாளை (சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நிகழ்விற்கு அனுசரணை வழங்கும் கரிகணன் நிறுவனப் பணிப்பாளர் சிவ.ராஜ்குமார் தம்பதியர் மங்கள விளக்கேற்றுவர்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தொடக்கவுரையையும் யாழ்.மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன் வாழ்த்துரையையும் வழங்குவர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ச.அமலஅசாம் 'நடையில் நின்றுயர் நாயகன் நாவலர்' என்ற பொருளிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் ஜெ. தவேதன் 'எழுந்த கொழுங்கனல' என்ற பொருளிலும் உரையாற்றுவர். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரித் தமிழாசிரியரும் இந்து ஆன்மீகப் பிரசாரகருமாகிய க. கனகதுர்க்கா 'நாவலர் வழி' என்ற பொருளில் நினைவுப் பேருரையாற்றுவார். தமிழ்ச்சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வரா நிறைவுரையையும் நன்றியுரையையும் வழங்குவார். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நிகழ்வில் பங்கேற்குமாறு தமிழ்ச்சங்கத்தினர் வேண்டியுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2021இல் வெளியிடப்பெற்றது.